**In the Fast Track Court (Magisterial Level) at Kovilpatti.**

**Present: Thiru.A. Mohammed Sadiq Hussain., B.A., B.L., (Hons).,L.L.M., P.G.D.I.P.,**

**Dated:11.07.2023**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

**S.T.C.119/2021**

**Witness- P W-1**

| | | |
|---|---|---|
| Name | : | செல்வமணிகண்டன் |
| Father's Name | : | கோமு |
| Address | : | 245/6 ராஜீவ் நகர், 3 வது தெரு, பாண்டவர்மங்கலம் |
| Age | : | **37** |

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969**)

(1969ம் ஆண்டு ஆணைமொழிச் சட்டத்தின்படியும், 1872ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம், அத்தியாயம் 10 மற்றும் குற்றவியல் நடைமுறை விதி 36ன்படி இந்நீதிமன்றத்தின் Magistrate Clerk திருமதி.அருணா ரூபவதி அவர்களால் சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது)

**புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை:**

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது. நான் இவ்வழக்கின் புகார்தாரராவேன். இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். புகார் பற்றிய முழு விபரங்கள் எனக்கு தெரியும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைதான். 23.11.2020-ம் தேதியிட்ட ரூ.16,00,000/-த்திற்கான தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, பாளையங்கோட்டை கிளையின் காசோலை எண்.044287-ன் அசல் **பு.சா.ஆ.1.(வழக்கு காசோலை குறித்து எதிரி தரப்பு வழக்கறிஞர் அந்த காசோலையானது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள காசோலை இல்லை என்று ஆட்சேபணை தெரிவித்துள்ளார்**) 24.11.2020-ம் காசோலை திருப்பப்பட்டதற்கான அசல் குறிப்பாணை **பு.சா.ஆ 2**. 07.12.2020-ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **பு.சா.ஆ 3**, 17.12.2020-ம் தேதியிட்ட 1வது எதிரியிடமிருந்து திருப்பப்பட்ட அஞ்சலக தபால் உறை **பு.சா.ஆ.4,** 11.12.2020 தேதியிட்ட 2வது எதிரியிடமிருந்து திருப்பப்பட்ட அஞ்சலக தபால் உறை **பு.சா.ஆ.5,**

11.12.2020 தேதியிட்ட 4 வது எதிரியிடமிருந்து திருப்பப்பட்ட அஞ்சலக தபால் உறை **பு.சா.ஆ.6** 09.12.2020 தேதியிட்ட 3 வது எதிரி பெற்றுகொண்டதற்கான அஞ்சலக அட்டை **பு.சா.ஆ.7** 24.12.2020 தேதியிட்ட பதில் அறிவிப்பு **பு.சா.ஆ.8** ஆக குறியீடு செய்ய வேண்டுகிறேன். புகாரில் கோரியவாறு தீர்ப்பளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கபடுகிறது.

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.A. Mohammed Sadiq Hussain.,
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti